[2022 ஏப்ரல் 6

60—

துணை மின் நிலையம்

***9661—திரு. ஆ. வெங்கடேசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, கல்வேலிப்பட்டி, கொண்டையம்பட்டி மற்றும் இடையபட்டி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, கல்வேலிப்பட்டி, கொண்டையம்பட்டி மற்றும் இடையபட்டி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்பொழுது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய பகுதிகள், சுமார் 16 கிராமங்களை உள்ளடக்கிய, சுற்றுவட்டாரப் பகுதிகளுடன் 22,000 மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகளாகும். இங்கு பெரும்பாலானோர் விவசாயிகள். விவசாய நிலங்களும், அதிகப்படியான விவசாய பம்ப் செட்டுகளும் பாதிக்கப்படுவதால், அந்தப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று, தொகுதி மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, வரக்கூடிய ஆண்டுகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையின் அடிப்படையில், துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடத் தேவைகளுக்கு மக்களும், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளும்* low voltage *பிரச்சினையால் பெரும் பாதிப்புக்குள்ளாவதால், மேற்கொண்டு இந்தப் பிரச்சினை குறித்து தகுந்த அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, விவசாயிகளுக்குத் தனி வேளாண் நிதிநிலை அறிக்கை அளித்த தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரில், இந்தப் பகுதியில் மின்சாரத்தைச் சீராக்கித் தருமாறு தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு, நன்றி தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரான மின் விநியோகம் செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசினுடைய வரலாற்றில் ஒரே ஆண்டில், கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை வழங்கி,* (மேசையைத் தட்டும் ஒலி) *அவற்றில் 193 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அரசினுடைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமிருக்கக்கூடிய 23 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்யக்கூடிய பணிகளில் வாரியம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து, கண்டிப்பாக*

வாரியத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுகளின் அடிப்படையில், நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், low voltage மற்றும் over load பிரச்சினை குறித்து எடுத்துச் சொன்னார்கள். 8,905 புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.625 கோடி நிதி வழங்குவதற்கு உத்தரவுகளைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) 8,905 புதிய மின்மாற்றிகளும் ஆறே மாதங்களில் முழுவதுமாக அமைக்கப்பட்டு, 100 சதவிகிதம் பணிகளை வாரியம் நிறைவு செய்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய தொகுதியில் அதுபோன்ற குறைபாடுகள் இருந்தால் மிக விரைவில், இரண்டு நாட்களுக்குள் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சேகர் அவர்கள்.

திரு. S. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், எங்கள் மாவட்ட முன்னாள் அமைச்சர் தங்கமணி அவர்களையும் வணங்குகிறேன்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூர் தொகுதியில், கபிலர்மலை யூனியனில் அய்யம்பாளையம், குன்னத்தூர், பிலிக்கல்பாளையம் போன்ற பகுதிகளில் low voltage பிரச்சினை உள்ளது. அங்கு ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உங்களுக்கு ஒரு துணைக் கேள்விக்குத்தான் அனுமதி. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

2022 ஏப்ரல் 6]

திரு. S. சேகர்: அதேபோல் அங்கேயுள்ள பஞ்சாயத்து tank–க்கு தண்ணீர் ஏறாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் அங்கு low voltage பிரச்சினை இருக்கிறது. அதைச் சரி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 216 துணை மின் நிலையங்கள் போக, மீதமிருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டிய இடங்கள் எவையெவை என்பது குறித்து துறையின் வாயிலாக ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த இடத்திலும் ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.

திரு. க. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி என்பது, 2011 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியால் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று. அந்தத் தொகுதியிலே பாதாள சாக்கடைத் திட்டம், சென்னை குடிநீர்த் திட்டம், உயர்மட்ட cable–ஐ பூமிக்கடியில் புதைக்கிற, புதைவடம் அமைக்கிற திட்டம் ஆகிய திட்டங்கள் இதுநாள் வரையில், ஏறக்குறைய இந்த 11 ஆண்டுகளில் செயல்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. ஆகவே, இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கடிதம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, வருகிற காலத்திலே புதைவடக் கம்பிகளாக, பூமிக்கடியிலே புதைக்கிற திட்டம் நிறைவேற்றித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2022 ஏப்ரல் 6*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 5 கோட்டங்களில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மீதமிருக்கக்கூடிய கோட்டங்களில், விடுபட்ட பகுதிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே இதுகுறித்து அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. எனவே, முழுவதுமாக சென்னை மாநகராட்சியினுடைய அனைத்து பகுதிகளிலும் மின் பாதைகளை புதைவடங்களாக மாற்றிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாரியத்திற்கு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். அதனடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நீலகிரி மாவட்டம், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 110* K.V. *துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, உயர்மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு, தற்பொழுது ஒரு பகுதி பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சியுள்ள பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதனால், மின் விநியோகம் முழுவதுமாக வழங்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அங்கு 110* K.V. *துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட பணிகளுக்கான நிதியாதாரங்களை உருவாக்கி, அந்தப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்த 110* K.V. *துணை மின்*

2022 ஏப்ரல் 6]

நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

ஆரம்ப சுகாதார நிலையம்

***5295—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, S. கொடிக்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

30 ஆயிரம் மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. S. கொடிக்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. S. கொடிக்குளம் கிராமம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1 இலட்சத்து 29 ஆயிரத்து 742 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், மக்கள்தொகை அடிப்படையில், விருதுநகர் மாவட்டம், சிவகாசி சுகாதார மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள S. கொடிக்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மான்ராஜ் அவர்கள், இருக்கையில் இல்லை.*